MVM Journal of Research Volume 7 Jan.-Dec., 2021

# சங்க இலக்கியத்தில் விழாக்கள் சுட்டும் பண்பாடு

**முனைவர் சே.கார்த்திகா**
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, டாக்டர் சாகிர் உசேன் கல்லூரி, இளையான்குடி

---

## முன்னுரை

மக்களின் துன்பத்தை மறக்கச் செய்து அவர்களை இன்பத்துடன் ஒன்றுபடுத்தி வைப்பது விழாக்களாகும். இவ்விழாக்கள் மனித மனங்களுக்குப் புத்துணர்ச்சியைத் தருவனவாகும். அத்துடன் ஒரு சமுதாயம் மலர்ச்சி அடைய அடிப்படைக் காரணமாக விளங்குவன விழாக்களாகும். அதனால் தான் வரலாற்று ஆசிரியர்கள் மக்களிடையே நின்று நிலவிய விழாக்களைக் கொண்டே ஒரு சமுதாயத்தின் பண்பாட்டினை அடையாளம் காணமுடியும் என்கின்றனர்.

## விழாக்கள்

விழாக்கள் மனித சமுதாயத்தில் நம்பிக்கையின் காரணமாகவே தோன்றியிருக்கின்றன. மனிதனது சிந்தனை கொண்டு மீலியல்பு ஆற்றல்களுக்குக் காரணம் காண இயலாத நிலை ஏற்படும் போது மனம் வேறு சில செயல்பாடுகளை நிகழ்த்துவதன் வாயிலாக அவ்வாற்றல்களின் பாதிப்புக்களிலிருந்து தப்பிக்க நினைக்கின்றது. அந்நிலையில் மந்திரங்களும் நம்பிக்கைகளும் தோன்றிவிடுகின்றன. இவை பண்டையச் சமுதாயங்களிடையே விஞ்சி இருப்பதையே சமூக வரலாறுகள் உணர்த்துகின்றன[1] என்று காந்தி கூறுவர்.

பொதுவாக விழாக்கள் சமுதாயம் சார்ந்தனவாகவும், சமயம் சார்ந்தனவாகவும் இருந்திருப்பதை அறியமுடிகிறது. சங்ககாலத்தில் விழாக்களைச் சமுதாய விழா, சமய விழா என்று இருவகையாகப் பகுக்கலாம். இதில் சமுதாய விழா என்பது மன்னனின் பிறந்த நாள் விழாவாகும்.

## பிறந்த நாள் விழா

சங்ககாலத்து மன்னர்களின் பிறந்த நாளை விழாவாக மக்கள் கொண்டாடியுள்ளது மக்களுக்கும், மன்னனுக்கும் இருந்த நெருங்கிய உறவுநிலையை வெளிப்படுத்துகிறது. நன்னனது பிறந்த நாளை மக்கள் கொண்டாடியதை மதுரைக் காஞ்சி,

**‘மன்னு தோறும் நின்ற குரவை சேரிதோறும்**
**உரையும் பாட்டும் ஆட்டும் விரைஇ**
**வேறுவேறு கம்பலை வெளிகாள்பு மயங்கிப்**
**பேரிசை நன்னன் பெறும் பெயர் நன்னாள்**
**சேரி விழாவின் ஆர்ப் பெழுந்தாங்கு’**[2]

என்ற பாடல் வரிகளால் புலப்படுத்துகின்றது. இப்பிறந்த நாள் விழாவை, ‘வெள்ளணி விழா’ என்று அழைப்பர். வெள்ளணி நாள் குறித்து நச்சினார்கினயர்,

**‘மங்கல வண்ணமாகிய வெள்ளணியும் அணிந்து அவ்வுயிர்க் கண்ணும் அருளே நிகழ்தலின் அதனை வெள்ளணி என்க’**[3]

என்று பொருள் கூறுகிறார். வெள்ளை நிற ஆடை அணிவது மங்கலம் குறிப்பதாக எண்ணியதால் இவ்வாறு செய்தனர் போலும்.

## இந்திர விழா

மருத நிலக் கடவுளான இந்திரனுக்காகச் செய்யப்படும் விழா இந்திர விழாவாகும். சங்ககாலத்தில் இவ்விழாவை மக்கள் கொண்டாடிய செய்தியினை ஐங்குறூற்றுப் பாடல் ஒன்றின் மூலம் அறியமுடிகிறது.

**‘இந்திர விழவிற் பூவி னன்ன**
**புன்றலைப் பேடை வரிநிழ லகவும்’**[4]

இந்த ஒரு பாடல் தவிர வேறு சான்று ஏதும் கிடைக்கவில்லை. இவ்விழாவை மிக விரிவாக மக்கள் கொண்டாடியதைச் சிலப்பதிகாரம் விளக்குகிறது. சங்க காலத்தில் மருத நில மக்கள் இந்திரனை மழைக் கடவுளாக வணங்கி இருக்கலாம். அதற்கான சான்றுகள் அதிகம் கிட்டாமையால் அது பற்றிய முழுமையான செய்தியை அறிய இயலவில்லை.

## பூந்தொடை விழா

இவ்விழா மறவர்கள் மத்தியில் உருவானதாகும். இவ்விழா குறித்து உரையாசிரியர், ‘மறவர் மக்கள் முதன்முதலாக அம்பு தொடுத்தற் பொருட்டு நிகழ்த்தும் திருவிழா’ என்று விளக்கம் தருகிறார். அகநானூறு,

**‘வார்கடில் பொலிந்த வன்கண் மழவர்**
**பூந்தொடை விழவின் தலைநாள் அன்ன**
**தருமணல் நெமிரிய திருநகர் முற்றம்’**[5]

என்று கூறுவதன் வழி மறவர்களின் கலைப் பயிற்சி ஆரம்ப நிலையில் கொண்டாடப்பட்ட விழாவாகத் தோன்றுகிறது.

## கார்த்திகை விழா

கார்த்திகை மாதத்தில் முழுநிலா நாளில் கார்த்திகை சேரும் நடு இரவில் விளக்கேற்றி வைத்து மக்கள் வழிபட்டதை,

**'மழைகால் நீங்கிய மாகவிசும்பில்**
**குறுமுயல் மறுநிறங் கிளர மதிநிறைந்து**
**அறுமீன் விளக் குறுத்து மாலை தூக்கிப்**
**பிழவிறல் மூதூர்ப் பலருடன் துவன்றிய**
**விழவுட னயர வருகதில் லம்ம'**[6]

என்ற அகநானூற்றுப் பாடல் சுட்டுகிறது. இவ்விழாவின் சிறப்பு விளக்கேற்றி வழிபடுவதேயாகும். சங்க கால மக்கள் கொண்டாடிய இவ்விழாவினை இன்றும் மக்கள் கொண்டாடி வருவதன் மூலம் இதன் பழஞ்சிறப்பினை உணரமுடிகிறது.

## பங்குனி விழா

பங்குனித் திங்கள் உத்தரமும், நிறைமதியுங் கூடிய நன்னாளில் உறையூர் குறுங்காட்டில் உள்ள சோலையில் மக்கள் கூடியிருந்து விழாக் கொண்டாடியதை,

**'பங்குனி முலக்கம் கழிந்த வழிநாள்'**[7]

என்ற அகநானூற்றுப் பாடல் புலப்படுத்தும்.

## தை நீராடு விழா

சங்க காலத்தில் திருமணமாகாத மகளிர் தமக்கு ஏற்ற சிறந்த கணவர் கிடைத்தற் பொருட்டு மார்கழி மாதத்தில் நோன்பிருந்து நீராடி வணங்குவர். இதனை,

**'தை இத்திங்கள் தண்கயம் படியும்**
**பெருந்தோள் குறுமகள்'**[8]

என்ற நற்றிணைப் பாடலும்,

**'தையில் நீராடிய தவந்தலைப் படுவாயோ'**[9]

என்ற கலித்தொகை பாடலும்,

**‘நறுவீ ஐம்பால் மகளிர் ஆடும்**
**தைஇத் தண்கயம்’**[10]

என்ற ஐங்குறுநூற்றுப் பாடலும் சுட்டுகின்றன. இத்தை நீராடலும் திருப்பாவை, திருவெம்பாவைப் பாடல்களைப் பாடி வணங்கும் செயலும் சங்க காலத்து மகளிர் செயல்களின் எச்சமாக விளங்குவதை அறியமுடிகிறது.

## நீராடல் விழா

நெய்தல் நிலத்து மக்களாகிய பரதவர்கள் புனித நீராடினால் தாங்கள் செய்த பாவங்கள் நீங்கும் என்று நம்பி, சிறை சுறவின் கோடுநட்டு வணங்கிப் பின் காவிரி கடலோடு கலக்குமிடத்தில்,

**‘தேறுநீர்ப் புணரியோடு யாறுதலை மணக்கும்**
**மலியோதத் தொலிகூடற்**
**தீதுநீங்கக் கடலாடியும்**
**மாசுபோகப் புனல்படிந்து’**[12]

நீராடியதைக் கடியலூர் உருத்திரங்கண்ணனார் பட்டினப்பாலையில் விவரிக்கின்றார்.

வையையில் நீராடச் சென்ற மதுரை நகரத்து மக்கள் நீர் வளம் பெருக வேண்டி நத்தை, நண்டு, இறவு, வாளை மீன் என்பனவற்றை நீரிலிட்டு, ‘நாடு விளைவதாக! உலகம் பொலிவதாக! என்று வாழ்த்தியதை,

**‘நத்தொடு நள்ளி நடையாறவு வயவாளை**
**வித்தி யலையில் விளைக பொலிகென்பார்’**[13]

என்று பரிபாடல் சுட்டுகின்றது. இவ்வாறு பாவங்கள் போக்கவும், வளம் வேண்டியும் மக்கள் புனித நீராடும் பழக்கம் இன்றும் மக்களிடையே இருந்து வருவதைக் காணலாம்.

## திருவாதிரை விழா

திருவாதிரை நிறைமதி நாளில் ஆகமங்களைப் பயின்ற அந்தணர்கள் சிவபெருமானுக்கு விழாத் தொடங்கி நடத்தியதை,

**‘ஞாயிறு காயா நளிமாரிப் பிற்குளத்து**
**மாயிருந் திங்கள் மறுநிறை ஆதிரை**
**விரிநூல் அந்தணர் விழவு தொடங்க’**[14]

என்ற பாடல் வரி சுட்டுகிறது.

## காமன் விழா

சங்க காலத்தில் இவ்விழாவை வேனிற் காலத்தில் நிகழ்த்தினர். ஆடவரும், பெண்டிரும் இன்பப் பொழுதுபோக்கு விழாவாகக் கொண்டாடினர். இக்காமனை மன்மதன், காமவேள், வேண்வான் என்று அழைத்தனர். இவ்விழாக் காலத்தில் பரத்தையருடன் கூடியாடிதை,

**'உறலியாம் ஒளிவாட உயர்ந்தவன் விழவினுள்**
**விறலிழை யவரோடு விளையொடு வான் மன்னோ'**[15]

என்றும், இளவேனிற் காலத்தில் விழா எடுத்து மகிழ்ந்ததை,

**'இருங்குடி லாகப் பெருந்துறை கவின்பெடிக்**
**குழவி வேனில் விழவெதிர் கொள்ளுஞ்**
**சீரார் செவ்வியும் வந்தன்று'**[16]

என்றும் கலித்தொகைப் பாடல்கள் புலப்படுத்துகின்றன. இவ்விழா இற்றை நாளிலும் வேனிற் காலத்து நிகழ்த்தப் பெறுவதைக் காணமுடிகிறது.

## சிறு சோற்று விழா

இவ்விழா குறித்துப் புறனாநூறு,

**'வாயின் மாடந்தொறு மைவிடை வீழ்ப்ப**
**நீயாங்குக் கொண்ட விழவினும் பலவே'**[17]

என்று கூறுகிறது. இச்சோற்றை தயிர் முதலானவற்றோடு கலந்து உருண்டைகளாக்கி அவற்றை வருவோர் ஒவ்வொருவருக்கும் கொடுத்து வழங்குவதே இவ்விழாவாகும்.

## முடிவுரை

சங்க இலக்கியங்களைக் கொண்டு இக்கால மக்களின் விழாக்களை அறியமுடிகிறது. காக்கை கரைதல், கனவு நிமித்தம், விரிச்சி, வான் நிமித்தம், புலனாட்டு, இந்திரவிழா, கார்த்திகை விழா, திருவாதிரை விழா முதலான பல விழாக்களும் பழக்க வழக்கங்களும், நம்பிக்கைகளும் பண்டைய மக்களிடத்து இருந்தது கொண்டு அவர்களது வாழ்க்கை நிலையினை அறியமுடிகிறது.

## துணைநூற்பட்டியல்


1. காந்தி, தமிழர் பழக்கவழக்கங்களும், நம்பிக்கைகளும், ப.53.
2. மதுரைக் காஞ்சி, பக்.615-619.
3. தொல்காப்பியம் பொருளதிகாரம், நச்சினார்கினியர் உரை, ப.285.
4. ஐங்குறுநூறு, ப.62
5. அகநானூறு, 187: 7-9
6. மேலது., 141: 6-11
7. மேலது., 137
8. நற்றிணை, 80: 7-8
9. கலித்தொகை, 59:13
10. ஐங்குறுநூறு, 84: 3-4
11. மதுரைக்காஞ்சி, பக்.590-591
12. பட்டினப்பாலை, பக்.97-100
13. பரிபாடல், 10: 85-86
14. மேலது., 11: 76-78
15. கலித்தொகை, 30: 13-14
16. மேலது., 36: 8-10
17. புறநானூறு, 33: 21-22